1619

# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

## புவியியல்

**தரம்: 08**

சுட்டெண்:.....................................

**நேரம்: 2 மணித்தியாலம்**

### பகுதி – I

❖ மிகச்சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.

(01) ஞாயிற்றுத்தொகுதியில் நீலக்கோள் எனச் சிறப்பிக்கப்படும் கோள்
1) செவ்வாய் 2) நெப்ரியூன் 3) புவி 4) வியாழன்

(02) ஒளியையயும், வெப்பத்தையும் தருகின்ற வான்பொருட்கள்
1) நடசத்திரங்கள் 2) கோள்கள் 3) குறுங்கோள்கள் 4) உபகோள்கள்

(03) எரிகல் வலயம் காணப்படுவது
1) புதன் - வெள்ளிக்கோள்களுக்கிடையில்
2) செவ்வாய் - வியாழன் கோள்களுக்கிடையில்
3) வியாழன் - சனிக் கோள்களுக்கிடையில்
4) யுரேனஸ் - நெய்ரியூன் கோள்களுக்கிடையில்

(04) ஞாயிற்றுத் தொகுதியில் உடுப்போலிகள் என அழைக்கப்படுபவை
1) உபகோள்கள் 2) கோள்கள் 3) குறுங்கோள்கள் 4) தூமகேதுக்கள்

(05) சந்திரனை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்று
1) தைப்பொங்கல் 2) சித்திரைப்புதுவருடம் 3) தீபாவளி 4) ரம்ழான்

(06) சூரியன் மத்திய கோட்டிற்கு உச்சம் கொடுக்கும் காலம்
1) கோடைச் சூரியகணநிலைக்காலம் 3) மாரிச் சூரிய கணநிலைக்காலம்
3) சமவிராக்காலம் 4) சங்கிராந்திக் காலம்

(07) தடைப்பட்ட தாவர வளர்ச்சி துளிர்த்து, பூத்துப் பயன் தர ஆரம்பிக்கும் பருவகாலம்
1) இலைதுளிர் காலம் 2) மாரி காலம் 3) இலையுதிர்காலம் 4) கோடை காலம்

(08) ஞாயிற்றுக்கதிர்வீசலிலிருந்து வரும் புற ஊதாக் கதிர்களின் நுழைவினைக் கட்டுப்படுத்தும் படை
1) மாறன் மண்டலம் 2) இடை மண்டலம் 3) வெப்ப மண்டலம் 4) ஓசோன் படை

(09) புவிமேற்பரப்பில் நீரின் சதவீதம்
1) 29 சதவீதம் 2) 78 சதவீதம் 3) 71 சதவீதம் 4) 68 சதவீதம்

(10) தென்னாசிய வலய நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கிய அமைப்பு
1) பிம்ஸ்ரெக் 2) சார்க்
3) ஐக்கிய நாடுகள் சபை 4) எபெக்

(11) இந்துக்குஷ், சுலைமான் மலைத்தொடர்கள் காணப்படும் தென்னாசிய நாடு
1) இந்தியா 2) பங்களாதேஷ் 3) நேபாளம் 4) பாகிஸ்தான்

(12) தென்னாசியாவின் மிகப்பெரிய நதிப்பள்ளத்தாக்கு
1) காவேரி நதிப்பள்ளத்தாக்கு 3) கங்கை நதிப்பள்ளத்தாக்கு
3) தாமோதர் நதிப்பள்ளத்தாக்கு 4) மகாவலி நதிப்பள்ளத்தாக்கு

(13) பங்களாதேஷில் பயிரிடப்படும் தங்கநார் எனச் சிறப்பிக்கப்படும் பயிர்
1) நெல் 2) கோதுமை 3) சணல் 4) பருத்தி

(14) உலகின் இரண்டாவது மிகப் பெரிய சினிமாக் கைத்தொழில் வளர்ச்சியடைந்துள்ள நகரம்
1) மும்பாய் 2) நியூயோர்க் 3) பரிஸ் 4) லொஸ்ஏஞ்சல்ஸ்

(15) தார்பாலைவனம் அமைந்துள்ள இந்திய மாநிலம்
1) பஞ்சாப் 2) மத்தியப் பரிதேசம் 3) குஜராத் 4) ராஜஸ்தான்

(16) கண்டல்கள், சதுப்பு நிலங்கள், ஈர நிலங்கள் முதலான தனித்துவமான சூழல் தொகுதிகள் காணப்படும் நிலத்தோற்றம்
1) நதிப்பள்ளத்தாக்கு 2) கரையோரம் 3) பாலைவனம் 4) மலைநாடு

(17) இலங்கையின் மொத்த நெல் உற்பத்தியின் பெரும் பகுதி செய்கை பண்ணப்படும் காலநிலை வலயம்
1) ஈரவலயம் 2) உலர்வலயம்
3) இடைவெப்ப வலயம் 4) குளிர்வலயம்



kalvi.lk

(18) கடற்கரையோரத்தைக் கொண்டிராத தென்னாசிய நாடுகள்
1) பாகிஸ்தான், இலங்கை 2) நேபாளம், பூட்டான்
3) மாலைதீவு, பூட்டான் 4) இந்தியா, பாகிஸ்தான்

(19) இலங்கையில் 1 : 50, 000 இடவிளக்கப்படங்களில் சமவுயரக்கோடுகளின் இடைவெளி
1) 20 மீற்றர்கள் 2) 100 மீற்றர்கள் 3) 200 மீற்றர்கள் 4) 50 மீற்றர்கள்

(20) இலங்கையின் இடவிளக்கப்படங்களில் நிர்வாக எல்லைகளை வரைந்து காட்டுவதற்குப் பயன்படுத்தும் நிறம்
1) கறுப்பு 2) நீலம் 3) சிவப்பு 4) கபிலம்

(20x2=40புள்ளிகள்)

## பகுதி – II

- ❖ **முதலாம், இரண்டாம் வினாக்கள் கட்டாயமானவை.**
- ❖ **ஏனையவற்றுள் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.**
- ❖ **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**


**(01)** 1) புவியியல் பாடத்தில் மூன்றாம் தவணைக்காக உமக்கு வழங்கப்பட்ட கணிப்பீட்டு வகையைக் குறிப்பிடுக.
(2புள்ளிகள்)

2) அக் கணிப்பீட்டினை மேற்கொண்ட பாட அலகினைக் குறிப்பிடுக.
(2புள்ளிகள்)

3) கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்வதற்காக திரட்டிய தகவல்களில் இரண்டு தருக.
(4புள்ளிகள்)

4) கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்ததால் நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் இரண்டினை எழுதுக.
(4புள்ளிகள்)

**(02)** கீழே தரப்பட்டுள்ள தென்னாசிய புறவுருவப் படத்தில் இலக்கம் (1) - (12) வரை குறித்துக் காட்டப்பட்டுள்ள அம்சங்களை அடைப்புக்குள்ளிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.
(இலங்கை, பாகிஸ்தான், வங்காள விரிகுடா, நேபாளம், இந்தியா, மாலைதீவு, அரபிக்கடல், பூட்டான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், இந்து சமுத்திரம், பாக்கு நீரிணை)



1) ..............................................  7) ..............................................
2) ..............................................  8) ..............................................
3) ..............................................  9) ..............................................
4) ..............................................  10) ..............................................
5) ..............................................  11) ..............................................
6) ..............................................  12) ..............................................

(12x1=12புள்ளிகள்)

**(03)** 1) கோள்கள், நட்சத்திரங்கள் இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகள் இவ்விரண்டு எழுதுக.
(3புள்ளிகள்)

2) புவியில் உயிரின வாழ்க்கைக்குச் சாதகமாகக் காணப்படும் மூன்று காரணங்களைக் குறிப்பிடுக..
(3புள்ளிகள்)

3) i. புவிச்சுழற்றி என்றால் என்ன?
(2புள்ளிகள்)

ii. புவிச்சுழற்சியின் விளைவு யாது?
(1புள்ளிகள்)

4) i. சிறுகோள்கள் என்றால் என்ன?
(2புள்ளிகள்)

ii. சிறுகோள்களுக்கு இரண்டு உதாரணங்கள் தருக.
(1புள்ளிகள்)

**(04)** 1) i. வளிமண்டலம் என்றால் என்ன?
(2புள்ளிகள்)

ii. வளிமண்டலம் புவியைச் சூழந்து காணப்படுவதற்கான காரணம் யாது?
(1புள்ளிகள்)

2) வளிமண்டலத்தினால் கிடைக்கப்பெறும் நன்மைகளில் மூன்றினைக் குறிப்பிடுக.
(3புள்ளிகள்)

3) வளிமண்டலம் மாசடைவதற்குக் காரணமாகும் மூன்று மனித நடவடிக்கைகளை எழுதுக.
(3புள்ளிகள்)

4) i. நீரின் மூன்று வடிவங்களையும் தருக.
(1.5புள்ளிகள்)

ii. புவிமேற்பரப்பில் நீர் பரம்பியுள்ள இடங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
(1.5புள்ளிகள்)

**(05)** 1) பின்வரும் நதிப்பள்ளத்தாக்குகள் அமைந்துள்ள தென்னாசிய நாடுகளைக் குறிப்பிடுக.

i. கங்கை நதிப்பள்ளத்தாக்கு -
ii. களனி நதிப்பள்ளத்தாக்கு -
iii. சிந்து நதிப்பள்ளத்தாக்கு -

(3புள்ளிகள்)

2) மாலைதீவில் சுற்றுலாக் கைத்தொழிலின் விருத்திக்குச் சாதகமாக காணப்படும் காரணிகள் மூன்று எழுதுக.
(3புள்ளிகள்)

3) மும்பாய் நகரத்தில் எதிர்நோக்கப்படும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக.
(3புள்ளிகள்)

4) தென்னாசிய வலய பாலைவன நிலத்தோற்றத்தின் மூன்று முனைப்பான அம்சங்களை எழுதுக.
(3புள்ளிகள்)


Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

(06) 1) i. பௌதிக அம்சங்கள் என்றால் என்ன?

(1.5புள்ளிகள்)

ii. அவ்அம்சங்களுக்கு மூன்று உதாரணங்களைக் குறிப்பிடுக.

(1.5புள்ளிகள்)

2) i. இலங்கையின் ஆகக் கூடிய நீளம் வடக்கே............................................................ இலிருந்து தெற்கே ..............................................வரை.................................................................. கிலோமீற்றர்களாகும்.

ii. ஆகக் கூடிய அகலம் மேற்கே....................................இலிருந்து கிழக்கே...... .................................. வரை.......................................................கிலோ மீற்றர்களாகும்

(3புள்ளிகள்)

3) பின்வரும் பண்பாட்டு அம்சங்களைப் பொருத்தமான நிறங்கள், குறியீடுகளைப் பயன்படுத்தி வரைந்து காட்டுக.

மாகாண எல்லை -

பிரதான வீதி -

குளம் -

நீர்ப்பாசனக்கால்வாய் -

மாவட்ட எல்லை -

புகையிரதத் தரிப்பு -

(6புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457